**செய்தி வெளியீடு எண்:1186** **நாள்:23.11.2021**

# செய்தி வெளியீடு

## சேலம் மாவட்டம், தாதகாப்பட்டியில் எரிவாயு சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் 5 பேர் உயிரிழப்பு – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் மற்றும் நிவாரண உதவி அறிவிப்பு

சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், தாதகாப்பட்டி கிராமம், பாண்டுரங்கன் விட்டல் தெருவில் திரு.கோபி என்பவரது வீட்டில் எரிவாயு சிலிண்டர் வெடித்த விபத்தில் அப்பகுதியியைச் சேர்ந்த (1)திரு.பத்மநாபன் (2)திருமதி தேவி (3)திரு.கார்த்திக் ராம் (4) திருமதி எல்லம்மாள் மற்றும் (5)திருமதி ராஜலட்சுமி ஆகிய ஐந்து நபர்கள் உயிரிழந்த செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கு தலா 5 இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**